OS.No. 202/2023

Date : 17.07.2026

Witness Name & Rank - சிரிதா - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1 ம் பிரதிவாதி எனது அம்மா, 2 மற்றும் 3 பிரதிவாதிகள் எனது சகோதரிகள் என்றால் சரிதான். வழக்கு விவரங்களை எனது வழக்கறிஞரிடம் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது தந்தை மற்றும் எனது சகோதரிகள் உட்பட எங்களது பூர்வீக சொத்து என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்து எனது தந்தைக்கு 15.12.1986 தேதியிட்ட பாகசாசனப்படி வந்தது என்றால் சரிதான். அவ்வாறு பாகப்படி எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் க.ச.எண். 714/1 ஏ வில் 3.40 ஏக்கர் வந்தது என்றால் சரிதான். எனது தந்தை இருந்த போதே மேற்படி 3.40 ஏக்கர் சொத்தில் நானும் எனது சகோதரிகளும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் இல்லை, எனது தந்தை தான் அனுபவித்து வந்தார். எனது தந்தை உடல்நிலை சரியில்லாத நிலையில் 05.11.2020 ம்தேதி எங்கள் அனுமதி இல்லால் 1 ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான்.
2. எனது தந்தை பெயரில் அவருடன் உயிருடன் இருந்த போது காலை எண். 714/1 ஏ–வில் 3.40 ஏக்கர் சொத்திற்கு பட்டா எனது தந்தை பெயரில் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு குறிப்பிட்டு தெரியாது, ஆனால் இருந்திருக்கும் ஏன் என்றால் அந்த நிலத்தை வைத்து கடன்கள் வாங்கியிருந்தார். அவ்வாறு 05.12.2020 ல் செட்டில்மெண்ட எழுதிக்கொடுத்த பிறகு எனது தந்தை 13.02.2021 ம் தேதி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். இறந்து போன எனது தந்தைக்கு இந்த வழக்கில் தரப்பினர்கள் மட்டும் தான் சட்டப்படி வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி எனது தந்தை காலமான பிறகு வழக்கு சொத்தில் நான் மற்றும் பிரதிவாதிகள் கூட்டு அனுபவத்தில் இருந்தோம் என்றால் எனது அம்மா பராமரிப்பில் இருந்தது. எனது தந்தை மறைந்த பிறகு தந்தை சொத்துக்களை எவ்வாறு பாகம் செய்து கொள்வது என குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் பேசப்பட்டது என்றால் குடும்ப உறுப்பினர்களான நாங்களே

பேசிக்கொண்டோம்.

3. குறிப்பாக தங்கவேல், பரமேஸ்வரன், வெங்கடாசலம் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் அவர்கள் தான் பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி குடும்ப சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதாலும் எனது தாயாருக்கு 05.11.2020 ல் தந்தை செட்டில்மெண்ட் எழுதி வைத்திருந்தால் எனது அம்மா எனக்கும் எனது சகோதரிகளுக்கும் மறு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதாக பேசிக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் கடந்த 01.04.2022 ம் தேதி எனது பெயருக்கு எனது அம்மா காலை எண். 714/1 ஏ சொத்தில் 1.56 ½ ஏக்கர் சொத்தை செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மற்றொரு சொத்து எதுவென்றால் காலை எண். 713/1 27 ½ செண்ட் சொத்தை செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அதே 01.04.2022 ம் தேதிக்கு எனது தாயாருக்கு 714/1 ஏ காலையில் 1.83 ஏக்கர் சொத்தை நானும் எனது சகோதரிகளும் விடுதலை செய்து கொடுப்பதாக ஆவணம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான்.

4. அதே போல் 01.04.2022 ம் தேதி 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எனது தாயார் தனியாக செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்ட போது அதை அளந்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல, அளந்து பார்த்து தான் எழுதினோம். யார் வந்து அளந்தது எப்போது அளக்கப்பட்டது என்றால் பிரதிவாதிகள் சர்வேயரை செட்டில்மெண்ட் எழுதுவற்கு 2 வாரத்திற்கு முன்பு அழைத்து வந்து அளந்தனர். மேற்படி அவ்வாறு அளந்து பார்த்த போது வரைபடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் மேற்படி நிலம் ஆவணம் எழுதவதற்கு முன்பு அளக்கப்படவில்லை ஆவணம் எழுதுவற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. அவ்வாறு அளந்து செட்டில்மெண்ட் எழுதுவதற்கு முன்பு அளக்கப்பட்டதாக எனது பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் செட்டில்மெண்ட் ஆவணப்படி தனித்தனியாக உட்பிரிவு செய்ய வேண்டி வருவாய் துறையில் மனு தாக்கல் செய்து அளக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5. தற்போது எனது பூமி என்ன உட்பிரிவில் உள்ளது என்றால் 714/1 ஏ 1–ல் உள்ளது. மேற்படி உட்பிரிவு எப்போது செய்யப்பட்டது என்றால் 2023 ல் செய்யப்பட்டுள்ளது. எனது அனுபவத்தில் உள்ள பூமி தான் 714/ 1 ஏ 1 பூமி என்றால் சரிதான். அதே போல் எனது அம்மா அனுபவத்தில் உள்ள பூமி 714/ 1 ஏ 2 வில் உள்ளது என்றால் சரிதான். எனது உட்பிரிவுப்படி அனுபவத்தில் உள்ள பகுதிக்கும் எனது அம்மா அனுபவத்தில் உள்ள பகுதிக்கும் இடையே ஒரு பொளி உள்ளது என்றால் சரிதான்.

**மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.YuvarajB.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---